# இந்துச்சட்ட மூலங்களில் விவாகரத்துக் குறித்த கருத்தாடல்கள்

Sayanolibavan Muhunthan

*University of Jaffna, Sri Lanka*

**ஆய்வுச் சுருக்கம்**

சமூக வாழ்வை ஒழுங்கமைப்பதற்கான நிறுவன ரீதியான ஏற்பாடுகளைச் சமூகங்கள் காலாதி காலமாக மேற்கொண்டு வந்துள்ளன. இந்து சமுதாயத்தைப் பொறுத்தவரையில் நிறுவன ரீதியான ஒழுங்கமைப்புக்கள் குறித்த பிரக்ஞையானது சமய நம்பிக்கை என்ற தளத்திற்கு அப்பால் நீட்சிபெறவில்லை யென்பது பொதுவான விமர்சனமாகும். காலனித்துவ ஆட்சியின் மூலம் பெற்றுக் கொண்ட ஆங்கிலமையக் கல்வியறிவும் நீதிநிர்வாக முறைகளுமே நவீன இந்துசமய இயக்கங்கள்தோன்றத்துணைசெய்தன.இந்துசமுதாயத்தை இற்றைப்படுத்தி ஒழுங்கமைக்க இவையே வழிகோலின என்பது பொதுவெளியில் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற கருத்தாக்கமாகும்.

மரபுவழிவந்த இந்துசமுதாயநிறுவமைப்புக்கள் திருமணம், விவாகரத்து, மறுமணம், சொத்துரிமை குறித்தவிடயங்களில் நீதியானஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை என்றவிமர்சனமும் இதன் தொடர்ச்சியாகவே மேற்கிளம்புகிறது. இக்கருத்துருவாக்கத்தின் யதார்த்தத்தைஆராய்வதே இந்த ஆய்வுக் கட்டுரையின் அடிப்படைப் பிரயத்தனமாகும். மேலும் மரபுவழியான இந்துச்சட்ட மூலங்களில் இடம்பெற்றுள்ளவிவாகரத்துக்குறித்தவரையறைகளும் வியாக்கி யானங்களும் அவைகாலத்துக்குகாலம் பொருள் கோடல் செய்யப்பட்டுள்ளமுறைமையும் கவனத்திற்குரியதாகும். இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பின்னர் இயற்றப்பட்ட இந்துத்திருமணச்சட்டத்தில்(1955)விவாகரத்துப்பற்றி இடம்பெறும் விவரணங்களும் நீதிமன்றுகளின் காடல்களும் இவ்வாய்வினை மேற்கொள்வதற்குரிய அவசியத்தினை உணர்த்திநிற்கின்றன.

**திறவுச்சொற்கள்** : இந்துச்சட்ட மூலங்கள், விவாகரத்து, மறுமணம், சொத்துரிமை